Registered No. M-4483 Madras War Review (TAMIL) 19-5-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ஞு மேமீ 19உ, வெள்ளிக்கிழமை இதழ் 37

N

W

F

தேசியப் போர் முனை

மே. த. கவர்னரவர்கள் வாழ்த்து

சர் ஆர்தர் ஹோப்.

தேசியப் போர் முனையின் மூன்றுவது ஆண்டு ஆரமபமாகிக் கொண்டிருக்கிறது. 1942-ம் வருஷம் அது ஆரம்பமானது. அது இருள் சூழ்ந்த பருவம். ஜப்பானியர்கள் ஏறக்குறைய நம் தலை வாசலுக்கு வந்து விட்டார்கள். ஆகவே, தேசியப் போர் முனையின் வேலை கடுமையானதா யிருந்தது. என்றுலும், ஊக்கத்தினுலும், விடாமுயற்சியினுலும், முடிவாக நேச நாடுகளுக்கு நிச்சயமாக வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையினுலும், அது வெற்றி கண்டது. இம் மாகாணத்தில் பெரும்பாலும் தோல்வி மனப்பான்மை அடியோடு ஒழிந்ததற்கு, நேச நாடுகளின் படைகளடைந்த வெற்றியை விட, இதன் முயற்சி தான் காரணம்.

இப்போது வெற்றியின் அறிகுறிகள் தோன்றுகின்றன. ஆகையால், எதிரிகளின் கடைசி பேர்வழியுங் கூட அழிந்து நிரந்தரமான சமாதானம் ஏற்படுகிற வரை, தேசியப் போர் முனை தன் முயற்சிகளைப் பெருக்கும்.

(ஒப்பம்) ஆர்தர் ஹோப்,
சென்னை கவர்னர்.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : மே. த. சர் ஆர்தர் ஹோப் ..	1	தீர்க்கதரிசிக்கும் மதிப்புண்டு	5
தேசீயப் போர் முனை : மே. த. கவர்னரவர்கள் வாழ்த்து	1	படம் : 'நாங்கள் வருகிறோம்'	7
முரசொலி	2	இரண்டாவது போர் முனையைப் பற்றி அச்சுப் பிரசாரம்	7
தலையங்கம் : தேசீயப் போர் முனையின் இரண்டாவது ஆண்டு விழா	3	மடமையின் மகிமை	10
இந்தியப் படைகளின் உயரிய போர்த் திறம் ..	4	யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

இறந்த காலம் நமக்குக் கெட்ட காலம். எதிர் காலத்தில் வெற்றியைக் காண்கிறோம். நேச நாடுகளின் விமான பலம் நாள் தோறும் ஓங்கிக் கொண்டிருக்கிறது. அவற்றின் தாக்குதல்களும் பெருகிக் கொண்டிருக்கின்றன. இதனால் ஜெர்மன் யுத்த முஸ்தீப்புகளே நொறுங்க ஆரம்பித்து விட்டன. கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் போராடி எதிரிகளை ஒரே மட்டமாக நொறுக்கும் பொருட்டு கடைசிப் போராட்டத்திற்குச் சித்தமாக நேச நாட்டுப் படைகள் இப்போது திரண்டு கொண்டிருக்கின்றன. கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும், வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும் நாஜிகளுக்கு அடிகள் விழப் போகின்றன, இதன் பயனாக நாஜிகள் அடியோடு அழிந்து போவார்கள் ; ஐரோப்பாவிற்கு மீண்டும் விமோசன முண்டாகும். நம் அனைவருக்கும் சமாதானம் விரைவில் ஏற்படும். முதலில் தாக்கும் பெருமை இத்தாலியிலுள்ள நமக்குத் தான் கிடைத்திருக்கிறது.

இத்தாலியிலுள்ள ஜெர்மன் படைகளை நாம் நாசப்படுத்தப் போகிறோம். போராட்டம் கடுமையானதாயிருக்கும் ; நெடு நாட்கள் நடக்கவுங் கூடும். ஆனால் நீங்கள் போர் வீரர்கள் ; உன்னத நிலையிலுள்ள வீரர்கள். சென்ற ஒரு வருஷத்திற் கதிகமாக வெற்றியையே பெற்றுக் கொண்டு வருகிறவர்கள். தைரியம், மன உறுதி, செயல் திறமை ஆகியவை உங்களுக்கு உண்டு. பெருவாரியான விமான பலத்தின் உதவியும் உங்களுக்கு இருக்கிறது. ஜெர்மானியர்களை விட, நம்மிடம் அதிகமாக பீரங்கிகளும் டாங்கிகளும் இருக்கின்றன. இதை விட நியாயமானதும் சிறந்ததுமான எந்தக் காரியத்திற்கும் ஒரு படையாவது இது வரை போர்க்களம் புகுந்த தில்லை. ஆகவே, கடவுள் உதவியாலும், ஆசீர்வாதத்தாலும், வெற்றி நமக்குக் கிடைப்பது உறுதி என்னும் நம்பிக்கை யோடு போருக்குப் போவோம்.

—ஜெனரல் அலெக்சான்டர்,

மே மாதம் 12-ம் தேதி நேப்பில்ஸிலிருந்து தன் படையினருக்கு விடுத்த செய்தி.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV 1944-ம் ஸ்ரீ மேமீ 19உ, வெள்ளிக்கிழமை இதழ் 37

தேசீயப் போர் முனையின் இரண்டாவது ஆண்டு விழா

சமீபத்தில் சென்னைப் பத்திரிகை யொன்று தன் தலையங்கத்தில் தேசீயப் போர் முனையைக் குறித்து சற்று வெடுவெடுப்பாகவே எழுதியிருந்தது. இந்த இயக்கத்தைக் குறித்து அது அதிருப்தியாகவே எழுதியிருந்தது. முக்கியமானதல்ல. விஷயம் என்னவென்றால், இந்த இயக்கத்தைக் குறித்து வெகுவாக விவரித்து அந்தக் கட்டுரைக்கு ஒரு முக்கியத்துவத்தை அது யுண்டாக்கி விட்டது. ஆகவே, இந்த இயக்கம் தன் மூன்றாவது வயது ஆரம்பத்திலேயே பொது மக்களிடையே முக்கியத்துவம் பெற்று விட்டது. யுத்தங் காரணமாகத் தோன்றிய பல திட்டங்கள் இதன் வாயிலாக உருப் பெற்றன. இந்தியாவின் பல மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலு முள்ள தேசீயப் போர் முனைப் பிரதிநிதிகள் சமீபத்தில் கூடி ஒரு மகா நாடு நடத்தினார்கள். சென்ற வருஷம் நடைபெற்ற மகா நாட்டிற்கு விஜயம் செய்திருந்தவர்கள் மட்டுமன்றி, மற்றும் பலரும் விஜயம் செய்திருந்தனர். ஒருவர் கூட வாராதிருக்கவில்லை. அந்த மகா நாட்டின் நிகழ்ச்சிக் குறிப்பு எல்லா விஷயங்களையும் தன்னுட் கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கது. அதில் பிரசாரத் துறையின் நுட்பங்கள் மட்டுமன்றி, தற்கால அரசியல் அமைப்பு, பொருளாதாரம் முதலிய பல துறைகளையும் தன்னுட் கொண்டிருந்தது. அந்தந்த ஊர்ப் பிரச்னைகள் இந்தத் துறைகளால் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகின்றன என்று பல பிரதிநிதிகளும் தெரிவித்தார்கள். அங்கே, நல்லுறவும், ஒற்றுமையும், ஒரே நோக்கமும் துலங்கியது. இந்தச் சிறப்புக்கள் பழைய புகழ் வாய்ந்த பார்லிமெண்டு சபைகளுக்குச் சிறப்புத் தருவன வாகும்.

தேசீயக் கொள்கையைக் குறித்தோ விசேஷ தேசீய விஷயங்களைப் பற்றிய கொள்கைகளைக் குறித்தோ, பேச உத்தியோகப் பற்றில்லாதவர்களும், பத்திரிகைப் படக்காரர்களுடைய கவனத்திற்கு உள்ளாகாதவர்களும், சமூதாயத்தில் செல்வாக்கில்லாதவர்களுமான இரண்டு டஜன் பேர்வழிகளுக்கு உரிமை ஏது என்று, சந்தேகப் பேர் வழிகள் கேட்கக் கூடும். பிரசாரத்தை ஓரளவிற்கு மட்டும் அரசாங்கத் தொடர்போடு அமைக்கவும், இதன் பொருட்டு செலவழிக்கப்படும் வரி கொடுப்போர் பணத்திற்குக் கணக்கு வைக்கவும் தான் தேசீயப் போர் முனை ; முக்கியமாக வேறென்ன செய்து வருகிறது என்றும் அந்தச் சந்தேகப் பேர்வழிகள் கேட்கலாம்.

இக் கேள்விகளுக்கு இதோ நாம் விடையளிக்கிறோம்: தேசீயப் போர் முனை யென்பது, இயற்றப்பட்டதோர் பிரசார இயந்திரமாக மட்டுமன்றி, உண்மையிலேயே ஒரு இயக்கமாக அமைந்திருப்பதாக மெய்ப்பித்து விட்டது. இதில் சேர்ந்திருப்பவர்கள் ஒரு உயரிய லட்சியத்தின் பொருட்டுப் போர் முனைக்குக் கிளம்பும் மனப் பான்மையுடையவர்கள். தம் மாபெரும் நாட்டிற்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்ட போது, அதைச் சமாளிப்பதற்குத் தேவையானபடி, மக்கள் உணர்ச்சி திரட்டப்படவில்லை யென்பதை உணர்ந்து, இதில் சேர்ந்தவர்கள். இந்நாட்டிலுள்ள லட்சக் கணக்கான மக்கள் அறியாமையிலும், ஆவலிலும் மூழ்கி, தப்புப் பிரசாரத்திற்கு உள்ளாகி யிருக்கும் போது, இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு உண்மையை விளக்கி, தேசீயப் பெருமை பற்றி எடுத்துக் கூறி, ஊக்கத்தை ஊட்டி, நம்பிக்கையை வளர்த்து வருகிறார்கள். இவை தான் வெற்றிக்கு வழிகள். இதன் பொருட்டு அவர்கள் இரண்டு முறைகளைக் கையாண்டார்கள். (1) தம் சொந்த நடை முறை, (2) பிரசாரம். பிரசாரத்திற்கு பெருந் தொகைகளைச் செலவு செய்து பிரசுரங்கள் முதலியவற்றை தயார் செய்யவேண்டும். பிறகு அவற்றை விநியோகிக்க வேண்டிய ஏற்ற சாதனங்களை அமைக்க வேண்டும்.

இந்த இயக்கத்தின் போக்கைச் சந்தேகித்தவர்களு முண்டு. இவர்கள், பலனைக் கொண்டு செயலின் தத்துவத்தை நிர்ணயிக்கும் இயல்புள்ளவர்கள்.

தேசீயப் போர் முனைக்கே தேவை யில்லை யென்று கூறியவர்களு முண்டு. அது வெகுவாகக் காலந் தாழ்ந்துத் தோன்றியதனால், அதனால் பயனென்று மில்லை யெனக் கூறுவோரு முண்டு. அதன் அமைப்பைக் குறித்துச் சந்தேகங் கொண்டவர்களு முண்டு. அது பற்றி, தாம் கொண்ட அச்சத்தினால் அதை வெறுத்தவர்களு முண்டு. ஆனால் பெருங் கஷ்டங்களுக் கிடையே சென்ற இரண்டு வருஷங்களாக தேசீயப் போர் முனை நடை பெற்று வந்திருக்கிறது. இதன் மூலம், முன் கூறிய ஆட்சேபனைகளுக் கெல்லாம் அர்த்தமில்லை என்று மெய்ப்பித்து விட்டது. வெளி நாட்டார் நம் மீது படையெடுத்து வந்து நம்மை வென்று விடுவார்களோ என்று அரித்துக் கொண்டிருந்த அச்சத்தை, அறவே போக்க உதவியது. அன்றியும் 1942-ம் வருஷம் உள் நாட்டில் கிளம்பிய பெரும் அரசியல் கொந்தளிப்பையும் பலமாக அடக்க உதவியது.

தன் சிறப்பைக் கொண்டே ஓங்கியது. அரசாங்கத்திற்கும் குடிகளுக்கும் ஒரு தொடர்பாக அமைய ஆரம்பித்து விட்டது. இராணுவத் தேவைகளை முன்னிட்டு இரு சாராரிடத்திலும் ஏற்படக் கூடிய சிக்கலான மாறுதல்களை அவரவர்களுக்கு விளக்கிக் கூறுகிறது. அரசியல் கொள்கைகளைத் தான் வகுக்கா விட்டாலும், குடியானவர்களுடைய குறைபாடுகள், பொய் வதந்திகளின் போக்கு, இராணுவத்தில் சேர்ந்துள்ள வர்களுடைய உள்ளக் கிளர்ச்சி முதலியவை பற்றி எடுத்து அரசாங்கத்தாருக்குக் கூறி, அரசியல் கொள்கையை அவர்கள் அமைக்க, பெரிதும் உதவுகிறது. நாட்டுப் பற்றுடையவர் களின் ஆவலாதிகளையும் நம்பிக்கைகளையுங் கூட எடுத்துக் கூறுகிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு உருவில்லாமல் பரீட்சிக்கப் படாமலிருந்த தேசீயப் போர் முனை, இந்தியாவின் யுத்த முயற்சியின் முக்கியமானதோர் அம்சமாக மாறிவிட்டது.

இவ்வளவு தூரம் சொல்லியுங் கூட, குறை கூறுகிறவர்கள் ஒரு கேள்வி கேட்கலாம்: அதாவது: யுத்தத்தின் போக்கு இப்போது மாறிவிட்டது; நேச நாட்டினர் வெற்றி பெறுவது உறுதி; மக்களின் மன நிலை கொஞ்சமும் குன்றாமலிருக் கிறது; இப்போது யுத்தம் நடைபெறுகிறது, அதுபற்றி அக்கரை கொள்ள வேண்டு மென்னும் உணர்ச்சி படித்தவர்களிடையே மட்டு மின்றி, எல்லா வகை மக்களிடத்தும் தோன்றி விட்டது. ஆகவே, இன்னும் தேசீயப் போர் முனை இருக்க வேண்டியது அவசியமா என்னும் கேள்வி எழலாம். இந்தக் கேள்வி ஒரு ஏமாற்றும் கேள்வி மட்டு மன்றி, ஜப்பானியப் பிரசாரத் திற்கு இடங் கொடுப்பது மாகும். ஐரோப்பிய யுத்தம் விரை வில் முடிவடையலாம்; ஆனால், இந்திய யுத்தம் இன்னும் ஆரம்பமாகி விட்டது என்று கூடச் சொல்லுவதற் கில்லை.

இன்றும் நாம் போராட வேண்டியவை பல உண்டு. உதா ரணமாக, 'யாருக்கோ வந்த விருந்தென்று' எண்ணி வாளா விருக்கும் மனப் பான்மை, போர் முனைகளில் நேரும் சிற்சில தோல்விகளினால் மனச் சோர்வடைதல், படபடப்பு, யுத்தச் சோர்வு காரணமாகத் தோன்றும் அருவருப்பு, சிதைந்து போகும் அரசியல் கொள்கையால் வீணக்கப்படும் முயற்சி, தன்னல மேலீட்டினால் கொள்ளை லாப மடிப்பதில் கண் ணோட்டங் கொள்ளுதல், முதலியவற்றை வெல்ல வேண்டும். இது வரை இந்தியா செய்துள்ள யுத்த முயற்சியைக் கொண்டு பார்த்தால், பரிபூரண யுத்த முயற்சி செய்துள்ள பிற நாடுக ளோடு, சமாதான மகா நாட்டில் சம நிலையில் அமர்ந்து அதில் கலந்து கொள்ள இன்னும் தகுதி பெற வில்லை என்று தான் சொல்ல வேண்டும். இந்தத் தகுதியைப் பெற உதவி செய்ய தேசீயப் போர் முனையால் முடியும். அது உதவவும் செய்யும்.

இந்தக் கட்டத்திற்குப் பிறகு சமாதானம் ஏற்படும். அப் போது எப்படிப் பட்ட நிலை ஏற்படும் என்று யாரும் சொல்ல முடியாது. கஷ்டமானதாகத் தான் இருக்குமென்று ஒரு வாறு கூறலாம். அக்காலத்தில் அரசாங்கத்தார் கருத்துக்களை குடிகளுக்கு எடுத்துக் கூறவும், குடிகளின் குறைகளையும் கருத்துக்களையும் அரசாங்கத்தாருக்கு எடுத்துக் கூறவும் ஒரு சாதனம் இருக்கவேண்டியது அவசியந் தான். அதற்கு தேசீ யப் போர் முனை பெரிதும் பயன் படும். அக்காலத்தில் 'போர்' என்னும் பதத்தை இச் சொற்றொடரினின்று நீக்கி விட, மேன்மை தங்கிய தலைவரவர்கள் இணங்கத் தான் செய்வார்கள்.

இந்தியப் படைகளின் உயரிய போர்த்திறம்

"அவர்களைக் கைவிடுதலாகாது"

சர் சுல்தான் அகமது கருத்து

இந்திய அரசாங்க பிரசார இலாக்கா அங்கத்தினரான சர் சுல்தான் அகமது இந்தியாவில் கிழக்கெல்லைப்புரத்திலுள்ள போர் முனைக்குப் போய் சமீபத்தில் டில்லிக்குத் திரும்பினர். தன் சுற்றுப் பிரயாணத்தைச் குறித்து மே மாதம் 9-ம் தேதி டில்லியிலிருந்து ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார். அதன் மொழி பெயர்ப்பு வருமாறு:—

நமது கிழக்குப் போர் முனையின் முன்னணிப் பிரதேசத்தில் மூன்று நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு நேற்று மாலை தான் நான் திரும்பி வந்து சேர்ந்தேன். பர்மா போர் முனையை நான் நேரில் கண்டு, கொண்ட கருத்தை உங்களுக்கு அறிவிக்க அதி சீக்கிரத்தில் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பத் தைப் பயன்படுத்திக் கொள்ளுகிறேன். இது என் கடமையாகும்.

முதலிலேயே உங்களுக்கு ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். கொஹிமா, இம்பால், அரக்கான் முதலிய இடங்களில் நடை பெறும் போராட்டத்தின் பலா பலன் உடனடியாகவோ, நாளடைவிலோ எப்படியாகுமோ என்னும் அச்சம் யாருக் காவது இருக்குமானல், அவர்கள் அதை அறவே மறந்துவிட வேண்டும். இப் போது இந்தியாவிற்கு ஆபத்தில்லை. இனி இருக்கவும் முடியாது. ஆனல், டோக்கியோ பிரசாரகன் மட்டும் இந்தியா விற்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டு விட்ட தாக ஓலமிடுவான். இதைக் கேட்டு நீங் கள் ஏமாந்து போகாதீர்கள். எதிரிகள் தம் கடைசி தந்திரத்தைக் கையாண்டு பார்க்கிறார்கள். போர் முனையில் தம் படைகளைக் கொண்டு சாதிக்க முடியாத காரியத்தை, வேறு முறையைக் கொண்டு சாதிக்க முயலுகிறார்கள்.

ஏமாறுதீர்கள்

அவர்களுடைய ஏமாற்றத்திற்கு நீங் கள் ஆளாகாதீர்கள். இம்பால் ஜப் பானியர் வயப்பட்டு விட்டதாக டோக்கி யோ உங்களுக்குப் பல முறை கூறியது. நான் இம்பாலுக்குப் பறந்து சென்று திரும்பினேன். நான் ஏறிச் சென்ற விமானத்திற்கோ, அல்லது அதற்கு பந் தோபஸ்தாக வந்த துணை விமானங்களுக் கோ, ஆகயத்திலோ, தரையிலோ கொஞ் சமும் ஜப்பானியர்களின் எதிர்ப்பே கிடை யாது. ஜப்பானியர் வசமிருப்பதாக மூன்று முறை டோக்கியோ வானொலி நிலையத்தால் கூறப்பட்ட அதே இம்பால் என்னும் பட்டணத்தில், போக்கு வரவு விமானங்கள் படைகளையும் யுத்தத் தள வாடங்களையும் கொண்டு வந்து இறக்கிய வண்ண மிருக்கின்றன. யுத்தப் பொருட் களையும் சப்ளைகளையும் இடைவிடாது மோட் டார் லாரிகள் ஏற்றிக் கொண்டு வந்து குவிக்கின்றன. இந்த விமானங்களும் மோட்டார் லாரிகளும் நம்மைச் சேர்ந்த வை. அங்குள்ள இந்தியப் படைகளின் மனோ நிலையும் பிரிட்டிஷ் படைகளின் மனோ நிலையும் வெகு உயர்வாயிருக் கின்றன. இந்தியப் படையினர் தோற் கடிக்கப்படுவார்களென்னும் எண்ணத் தை அவர்களுக்கு உண்டாக்கும் பொருட்டு ஜப்பான் செய்யும் முயற்சியைக் கைவிடும் படி நான் அவர்களுக்கு வற்புறுத்திக் கூறுவேன்.

உத்தியோகஸ்தர்களுடன் விருந்து

நான் முன்னணிப் பிரதேசத்திற்குப் போன முதல் நாள், வைசிராய் கமிஷன்

(6-ம் பக்கம் பார்க்க)

தீர்க்கதரிசிக்கும் மதிப்புண்டு

ஒரு தலை சிறந்த எழுத்தாளர் தன் மாகாணத்திலுள்ள ஓர் உயர்ந்த உத்தியோகஸ்தருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியொன்றைப் பிரசுரிக்கும்படி நமக்கு அனுப்பி யிருக்கிறார்கள். அதன் மொழி பெயர்ப்பு வருமாறு :—

நான் சென்னையி லிருந்து திரும்பியவுடன் அம்மாகாணத்தில் தேசீயப் போர் முனை செய்து கொண்டு வரும் சிறந்த வேலையைக் குறித்து நேரில் நான் தங்களுக்குக் கூறியது ஞாபகமிருக்கலாம். நமது நன்மையை முன்னிட்டு, அம்முறையை நாமும் பின்பற்றலா மென்று ஆலோசனை கூறுகிறேன். இது பற்றி ஒரு குறிப்பு அனுப்பும்படி அன்புடன் என்னைக் கோரினீர்கள். அக் குறிப்பை மகிழ்ச்சியோடு அனுப்புகிறேன்.

இப்போது என் வேலை மிகவும் எளிதாக்கப்பட்டுவிட்டது. சமீபத்தில், மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த பிரசார இலாக்காவின் பிரசார ஆலோசனைக் கமிட்டி டில்லியில் கூடியது. அப்போது, தேசீயப் போர் முனையின் தலைவர்கள் பலரும், முக்கியமான பத்திரிகா நிருபர்களும், பத்திரிகாசிரியர்களும் விஜயம் செய்திருந்தார்கள். அப்போது **பிகம் ஷா நவாஸ்** அவர்கள் எனக்கு முன்னதாகவே, சென்னை தேசீயப் போர் முனையார் செய்துள்ள வேலைகளைக் குறித்துப் பெரிதும் பாராட்டிப் பேசினார்கள். எனக்குச் சந்தர்ப்பங் கிடைத்த போது, அவர்கள் கூறியதை ஆமோதிக்கத் தான் என்னால் முடிந்தது.

நான் இரண்டொரு வட்டாரங்களைத் தான் பார்வை யிட்டிருந்தேன். அவர்கள் என்னை விட விரிவாகச் சுற்றுப் பிரயாணம் செய்திருந்தார்கள். ஆனால், கடைசியில் நாங்கள் இருவரும் ஒரே வகை முடிவிற்குத் தான் வந்தோம். தேசீயப் போர் முனையின் தலைவராக ஒரு ஆங்கிலேயர் இருந்தால், நாசம் ஏற்படக் கூடுமென்று அஞ்சிக் கொண்டிருந்தேன். ஆனால், இப்படிப் பட்ட அச்சத்திற்குக் கொஞ்சமும் ஆதார மில்லை யென்று என் அனுபவத்தால் தெரிந்து கொண்டேன். இந்த ஸ்தாபனத்தில் எவ்விதக் குறைபாடு மில்லை. **எவ்வளவு சிறந்த முறைகளி லெல்லாம் பிரசாரம் நடைபெறக் கூடுமோ அந்த முறைகளி லெல்லாம் சென்னையில் பிரசாரம் நடைபெறுகிறதென்று பிகம் ஷா நவாஸ் கூறியது முற்றும் உண்மையே.** அவை பற்றி இப்போது குறிப்பிடுகிறேன்.

சென்னையில் நடைபெறும் வேலையில் மனதில் பதியத் தக்க அம்சத்திற்குக் காரணம், ஒற்றுமைப் பட்ட ஊக்கம் என்று தோன்றுகிறது. இங்கே நம் வேலை பொதுவாகச் சிதறிப் போயிருக்கிறது. ராணுவத் தலைமைக் காரியாலயங்கள் உள்ள இடங்களில் நமது ராணுவக் காட்சி சாலைகள் நடத்துகிறோம். இந்த இடங்கள் நகரங்களுக்கு வெகு தூரத்திற்கு அப்பால் இருக்கின்றன. நமது தேசீயப் போர் முனை சுவரொட்டிப் படங்களும், மற்ற படங்களும் அரசாங்கக் காரியாலயங்களிலே ஒட்டப்பட்டிருக்கின்றன. மற்ற ஸ்தாபனங்கள் வேலை செய்யும் இடத்திற்குப் புறம்பே இந்த இடம் இருக்கிறது. இங்கே செய்யப்படும் வேலை செம்மையாக நடைபெற்றாலும், சென்னையைப் போல் ஒன்றிற் கொன்று தொடர்போடு அமைந்ததாக வில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சென்னை நகரந் தான் மத்திய ஸ்தானம். அங்கிருந்து தான் பிரசார ஒளி மாகாணத்தின் பல திசைகளிலும் வீசுகிறது. இங்கே நாம் தலை நகரத்திலேயே தகுந்தபடி ஸ்தாபிதம் செய்யாமல் விட்டுவிட்டோம்.

சென்னையில் மகா முக்கியமான பகுதி மௌண்ட் ரோட். இங்கே யுள்ள ஒரு பெரிய கட்டடம் முழுவதையும் தேசீயப் போர் முனை எடுத்துக் கொண்டிருக்கிறது. யுத்தத் தோடு நேர் சம்பந்த முடைய காரியாலயங்களும், யுத்த வேலைகளுக்குச் சம்பந்தப்பட்ட காரியாலயங்களும் அங்கே இருக்கின்றன. கவர்னர் யுத்த நிதி, யுத்தக் கடன் கமிட்டி, தேசீய சேமிப்புக் கமிட்டி, தேசீயப் போர் முனை, யுத்தக் காட்சி சாலை, பெண்கள் வேலை, உணவுப் பொருள் பெருக்கம், முதலிய பல வகைப் பட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்களும் இங்கே தான் இருக்கின்றன. தெரு வழியே போகிறவர்கள் கவனத்தை ஈர்க்கத் தக்க முறையில் காட்சி சாலை அமைந் திருக்கிறது. வெளியே ஒட்டப் பட்டிருக்கும் சுவரொட்டிகள் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

அங்கே நடைபெறும் வேலைகளைக் குறித்துத் தெரிந்து கொள்ளும் பொருட்டு இரண்டொரு ஜில்லாக்களை மட்டும் நான் தேர்ந்தெடுத்துக் கொண்டேன். வங்காளத்திலுள்ளது போலவே அங்கேயும் உணவுப் பொருள் நிலைமை மோசமாயிருந்தது. என்றாலும், அங்குள்ள மக்கள் அதை அமைதியோடு சகித்துக் கொண்டார்கள். உணவுப் பொருட்களைச் சரியானபடி விநியோகிப்பது பற்றியும், அதிகமாகச் சாகுபடி செய்வது பற்றியும், தேசீயப் போர் முனையாளரோடு பெரிதும் ஒத்துழைக்கிறார்கள். இது கண்டு நான் பெரிதும் ஆச்சரியமடைந்தேன். உதாரணமாக, திண்டுக்கல்லில் ஒரு குறைந்த விலை அரிசிக் கடையை தேசீயப் போர் முனையாளரே நடத்துகிறார்கள், அங்கே, ஏழை மக்களுக்குத் தேவையான அளவிற்கு மட்டும் அசல் விலைக்கு அரிசி விற்கப்படுகிறது. அங்கிருந்த ஒத்துழைப்பையும் ஒழுங்கு முறையையுங் கண்டு நான் ஆச்சரிய மடைந்தேன். இதில் காங்கிரஸ் மனப்போக்குள்ளவர்களுங் கூட உதவினார்கள். தேசீயப் போர் முனையைக் குறித்துத் தெரியாத கிராமமே கிடையாது. அதிகமாகச் சாகுபடி செய்யுங்கள் என்னும் இயக்கத்தைப் பரவச் செய்யும் பொருட்டுக் கூட்டப்படும் கூட்டங்களுக்கு, ஆயிரக் கணக்கான கிராமவாசிகள் விஜயம் செய்கின்றனர். அவர்களைக் கோரிக் கொள்ளுவது போலவே அவர்களும் விருப்பத்தோடு நடந்து கொள்ளுகிறார்கள். அங்குள்ள பல ஸ்தாபனங்களிலும் நடை பெறும் வேலைகளைக் காட்டும் படங்களை எடுத்து அனுப்பும்படி மாகாண அமைப்பாளரைக் கோரி யிருந்தேன். அவை என் கைக்குக் கிடைத்தவுடனே, அவற்றை “டெய்லி கெஜெட்” பத்திரிகையில் வெளியிடுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

நான் டில்லிக்குப் புறப்படு முன்னதாக ஒரு ஆங்கில நண்பரிடம் இதைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தேன். ஜப்பான் வெடி குண்டுகள் சில சென்னையில் வீழ்ந்த காரணத்தால் இப்படிப் பட்ட நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கக் கூடுமென்று அவர் கூறினார். அவருடைய கருத்துக்கு நான் மாறுபட்டேன். அப்படியானால், நூற்றுக் கணக்கான வெடி குண்டுகளுக்கு இலக்கான வங்காளத்தின் நிலைமை என்ன வென்று கேட்டேன். தேசீயப் போர் முனை சென்னையில் வெற்றி பெற்றதற்குக் காரணம், நல்ல அமைப்பும் உண்மையான முயற்சியுந் தானென்று நான் கூறுவேன்.

சென்னையின் அடிச் சுவட்டை நாமும் ஏன் பின்பற்றக் கூடாது? நம்முடைய முயற்சிகள் எல்லாவற்றையும் ஒன்றிற் கொன்று தொடர்புடையதாக்கி, ஒரு மத்திய ஸ்தானத்தில் அவை பற்றிய எல்லாக் காரியாலயங்களையும் அமைக்கலாம். இதன் பொருட்டு நகர சபைக் கட்டடத்தின் ஒரு கோடியை ஒதுக்கித் தரும்படி கட்டளை பிறப்பிக்கச் செய்யலாம். நமது காரியாலயங்களைக் கண்டு போகும்படி பொது மக்கள் உள்ளங்களைக் கவரலாம். இப்படிப்பட்ட வேலைகளுக்குத் தலைமை ஸ்தாபனமாக இந் நகரத்தை ஆக்கலாம். நமது பிரசாரமும் மேலும் முறையாக நடைபெறலாம். செய்திகளைப் பெரிதுங் கொண்ட பிரசுர மொன்றை வாரந் தோறும் வெளியிடலாம். இந்தப் பிரசுரச் செலவை, விளம்பரங்களைக் கொண்டு ஈடு செய்து கொள்ளலாம். இம் மாகாணத்திலுள்ள மற்ற இடங்களை விட, தலை நகரத்தில் தான் அதிகமாக வேலை நடைபெற வேண்டும்.

இந்தியாவைத் தாக்க ஜப்பானியர்கள் முயற்சிக்கிறார்கள் என்னும் காரணம் பற்றி, எனது ஆலோசனைகளை உடனே அமுலுக்குக் கொண்டு வர வேண்டியது அவசியம் என்று வற்புறுத்துகிறேன். சென்னையிலுள்ள பெண்களும் குழந்தைகளும் கூட உண்மையிலேயே ஜப்பானுக்கு விரோதமான மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள். இது பற்றி அவர்கள் பாடிய பாட்டுக்கள் கருத்துக்கள் நிறைந்திருந்தன.

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

உத்தியோகஸ்தர்களுடன் அவர்களுடைய உணவுச் சாலையில் உணவருந்தினேன். நான் அங்கே போவது அவர்களுக்கு முன்னதாகவே தெரிந்திருக்குமானால் விசேஷ உணவுகள் ஆயத்தம் செய்திருக்கக் கூடும் என்று கூறினார்கள். அவர்கள் உண்ணும் உணவை பகிர்ந்து கொள்வது தான் எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரும் என்று கூறினேன். உண்மையிலேயே அது தான் எனக்குப் பெரிதும் மகிழ்ச்சி தந்தது. அவர்களுடைய உணர்ச்சியைப் போலவே அவர்களுடைய உணவும் உயர்ந்ததாயிருந்தது. ஒரே மேசையைச் சுற்றி இந்துக்களும், முஸ்லீம்களும், சீக்கியர்களும் உட்கார்ந்து உணவருந்தினார்கள். 'ஜப்பானியர்கள் இந்தியாவைத் தாக்கி வெற்றி பெறுவார்களாம்' என்று கூறக் கேட்டவுடனேயே அவர்கள் வயிறு குலுங்கச் சிரித்தார்கள்.

ஜப்பானியர்களின் குண விசேஷம்

"எல்லாப் போர் முனைகளிலும் எங்கள் புகழை நாங்கள் மெய்ப்பித்து விட்டோம்; எங்களிடம் மிக உயர்ந்த தகுதிப் பொருட்கள் இருக்கின்றன; விமான பலத்தில் நாம் மிகவும் உயர்ந்து விட்டோம்; ஏராளமான உணவுப் பொருட்கள் நம்மிடம் இருக்கின்றன. நம் நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டு நாம் போராடிக் கொண்டிருக்கிறோம், எந்த எதிரியைக் குறித்தும் நாம் ஏன் பயப்பட வேண்டும்? இந்த எதிரி வெளிப்பட்டுப் போர் தொடுக்க மறுக்கிறான்; காட்டிற்குள்ளே பதுங்கிக் கொண்டிருந்து தாக்குகிறான். கிராம வாசிகளின் உணவைப் பிடுங்கித் தின்கிறான். அவர்களுடைய விமானங்கள் திடீரென்று வந்து தாக்கி விட்டு ஓடிப் போகின்றன. ஆயுதபாணிகளாயில்லாத பொது மக்களை மிருகத்தனமான சித்திர வதைகளுக்கு உள்ளாக்குவது தான் அவர்களுடைய போர்த் தன்மை" என்றெல்லாம் அவர்கள் கூறினார்கள்.

வெற்றி தானாகவே தேடி வரும்

"எல்லா வகைகளிலும் நமது மூல பலம் மிகவும் உயர்ந்ததாயிருப்பதனால், வெற்றி தானாகவே நம்மைத் தேடி வருவது உறுதி" என்று ஒரு சுபேதார் மேஜர் என்னிடம் கூறினார். மேலும் அவர் கூறியதாவது:—

நமது பாஷையிலேயே தோல்வி என்னும் பதத்திற்கே இடமில்லை. நாம் தோற்றுப் போவோமானால், நமது குடும்பத்திற்கும் கிராமத்திற்கும் நம் நாட்டிற்கும் பெரும் இழிவாக முடியும். தாங்கள் திரும்ப டில்லிக்குப் போய், ஜப்பானியர்களைத் தோற்கடிக்காமல் நாங்கள் திரும்பப் போவதில்லையென்று, அங்குள்ளவர்களுக்கு அறிவியுங்கள்.

ஜப்பானியர்களை நசுக்கி விரட்டியடிக்கும் திறமை அவர்களுக்கு உண்டு என்பது பற்றி நீங்களும் நானும் கொண்டுள்ள உறுதி பற்றி அவர்களுக்கு வற்புறுத்திக் கூறினேன். ஆஸ்பத்திரிகளிலுள்ள நோயாளிகளும், காயப்பட்டவர்களும், இந்திய நர்சுகளும், பெண் டாக்டர்களும் முகமலர்ச்சியோடு தானிருந்தார்கள். வெற்றி பெறுவது உறுதி என்னும் நம்பிக்கை அவர்களுக்கு திண்ணமாயுண்டு அவர்கள் ஒவ்வொருவரும் மிகச் சிறந்த முறையில் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

இந்தியப் படை வீரர்களின் தலைசிறந்த போர்த் திறமையை மெய்ப்பிக்க பர்மா போராட்டமும் ஒரு ஏற்ற சந்தர்ப்பமாயமைந்தது என்று ஜெனரல் ஸ்லிம் என்னிடம் கூறினார்:—

'அவர்கள் எல்லோரும் முதல்தரமானவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொரு மாகாணத்தைச் சேர்ந்தவர்களும் மிகச் சிறந்த முறையில் சேவகம் செய்தனர்; இன்னும் செய்து கொண்டுமிருக்கின்றனர்.'

நான் இம்பாலுக்குப் போகப் போகிறேனென்று முதல் நாள் மாலையே டோக்கியோ வானொலி நிலையம் அறிவித்திருந்தது. ஆகையால் நான் இம்பாலுக்குப் போன போது, பலமான பந்தோபஸ்துடன் தான் விமானத்தில் பறந்து சென்றேன். எவ்வித சம்பவமுமின்றி நாங்கள் இம்பால் போய்ச் சேர்ந்தோம். சேர்ந்தவுடனே, நாங்கள் கேள்விப்பட்டதென்ன? சுமார் 2 மணி நேரத்திற்கு முன்னதாக 20 ஜப்பானிய விமானங்கள் இம்பாலைத் தாக்கினவாம். அவை எல்லாம் தப்பியோடு முன்னதாக அவற்றுள் 7 விமானங்களை நம் படையினர் சுட்டு வீழ்த்தினர். அன்று பிற்பகல் பிஷன்பூரில் நடைபெற்ற போராட்டத்தில் 4 ஜப்பான் பீரங்கிகளை நம் படைகள் கைப்பற்றின. எனது விஜயம் தமக்கு நல்லதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்திருப்பதாக மேஜர் ஸ்லிம் விளையாட்டாகக் குறிப்பிட்டார். இம்பாலிலுள்ள இராணுவத் தலைமைக் காரியாலயத்தில் நான் இருக்கும் போது எதிரி படைகள் எங்கெங்கிருக்கின்றன வென்றும் நமது படைகள் எங்கெங்கிருக்கின்றன வென்றும் விளக்கிக் கூறினார்கள். பிறகு எனக்கு விஷயம் தெளிவானது. அதைரியத்திற்கு இடமே கிடையாது என்பதை யுணர்ந்தேன். நமது படைகள் சாதகமான இடங்களில் பலமாக வேரூன்றிக் கொண்டிருந்தன. பதுங்கிக் கொண்டிருக்கும் காடுகளிலிருந்து எதிரிகள் வெளிப்பட்டு போர் கொடுக்கும் சமயத்தில் போராடுவதற்கு பெரிதும் நம்படையினர் ஆவலாயிருந்தனர்.

செலாவணி மோசடி

மணிப்பூரிலுள்ள பிரிட்டிஷ் பிரதிநிதி இம்பாலுக்கு வந்து என்னைக் கண்டார். அப்போது பர்மாவில் ஜப்பானியர்கள் தம் வயப்பட்டுள்ள பகுதிகளில் வழங்கி யிருக்கும் செலாவணிகளை மாதிரிக்காக என்னிடம் காட்டினார். அந்த 5 ரூபாய் 10 ரூபாய் நோட்டுக்கள் கவர்ச்சியான முறையில் அச்சிடப்பட்டிருந்தன; ஆனால் பாங்கியின் பெயர் அதில் குறிப்பிடப்படவில்லை. நமது பத்து ரூபாய் நோட்டுக்களைப் போலவே கெட்டிக்காரத் தனமாக அச்சிட்டு தம் வயப்பட்ட நாடுகளில் தாராளமாக உபயோகித்து வரும் நோட்டு ஒன்றையும் மாதிரிக்காக என்னிடம் காட்டினார்.

முகமலர்ச்சியும் மன உறுதியும்

இம்பால் போர் முனையில் நான் கண்ட முகமலர்ச்சியையும் மன உறுதியையும் அரக்கானிலும் கண்டேன். உஷ்ணந்தாள மாட்டாமல், உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் சட்டைகள் எதையும் போட்டுக் கொள்ளாமலேயே தம் அலுவல்களைக் கவனித்துக் கொண்டு வந்தார்கள். ஆஸ்பத்திரிகளிலும் தலைமைக் காரியாலயத்திலும் நமது உயரிய பலத்தைப் பற்றி பூரண உறுதி நிலவியது. போர் முனைகளிலிருந்து அங்கே வந்து கொண்டிருந்த செய்திகள் மேலும் ஊக்கந் தருவனவாயிருந்தன. நான் சென்ற இடங்களிலெல்லாம் உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் நிலைமையை நான் உணர்ந்து கொள்ளுவதற்கு எல்லா வகைகளிலும் உதவினார்கள். இந்திய உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் எனக்கு நல்வரவு கூறி, இந்திய நிர்வாக சபை யங்கத்தினரை வரவேற்கும் பேறு பெற்றது பற்றி தம்மைப் பெரிதும் பாராட்டிக் கொண்டார்கள்.

மீண்டும் வரும்படி அழைப்பு

14-வது படையின் தலைமைக் காரியாலயத்தில் ஜெனரல் ஜிப்பர்ட்டிடம் விடை பெற்றுக் கொண்டபோது, அவருடைய படையின் உத்தியோகஸ்தர்களும் என்னிடம் காட்டிய அன்பிற்கும் மரியாதைக்கும் நான் நன்றி கூறினேன். நான் அங்கு விஜயம் செய்ததை அனைவரும் பாராட்டியதாக அவர் கூறினார். அவர், "நானும் பாராட்டுகிறேன். இது முகஸ்துதியல்ல; தாங்கள் மீண்டும் எப்போது இங்கு விஜயம் செய்வீர்களென்று தெரிவிக்க வேண்டும்; வேண்டிய ஏற்பாடுகள் நான் முன்னதாகவே செய்து வைக்கிறேன்," என்று அந்த ஜெனரல் கூறினார். அவருடைய மனமார்ந்த அழைப்புக்கு நன்றி கூறி, விமான மூலம் கல்கத்தாவிற்குப் பயணமாகி விட்டேன்.

எனது கருத்துக்கள்

பர்மா அஸ்ஸாம் போர் முனைகளில் மூன்று நாட்கள் நான் சுற்றுப் பிரயாணம் செய்ததன் பயனாக, என் மனதில் தோன்றியவற்றைத் தங்களுக்கு அறிவிக்க இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள ஆசைப் படுகிறேன். முதலாவதாக, நமது படையினர் சிறந்த மனோபலத்தோடும், தைரியத்தோடும், மன உறுதியோடுமிருக்கிறார்கள். இரண்டாவதாக எங்கு பார்த்தாலும், ஏராளமான சப்ளைகளும், தளவாடங்களும் ஆயுதங்களைக் கொண்ட போக்குவரவு சாதனங்களும் காணப்படுகின்றன. மூன்றாவதாக, மறுக்க முடியாத நமது விமான பலம். (இருந்தாலும் அவ்வப்போது ஜப்பானிய விமானங்கள் திருட்டுத்தனமாக வந்து தாக்கிவிட்டு ஓடிப் போகின்றன.) நான்காவதாக, ஜப்பானியப் படைகளின் நிலைமையைக் குறித்து நம் படையினர் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதாவது, எதிரிப் படைகள் சிக்கித்

(9-ம் பக்கம் பார்க்க)

"நாங்கள் வருகிறோம்"!



இரண்டாம் போர் முனை, அதாவது மேற்கிலிருந்து ஜெர்மனியைத் தரை வழியாகத் தாக்கும் பிரம்மாண்டமான முயற்சி, கூடிய சீக்கிரம் தொடங்கப்படும் என்ற விஷயத்தை நமது சித்திரக்காரர் மேற்கண்டவாறு உருவகப்படுத்தி யிருக்கிறார். "ஆகஸ்ட்டு 1940-ல் லண்டனுக்கு வருவதாக வாக்களித்தும் நீர் வரவில்லை; ஆகையால் நாங்களே உம்மிடம் சீக்கிரத்தில் வருகிறோம்," என்று மிஸ்டர் சர்ச்சில் ஹிட்லருக்குக் கடிதம் எழுதுவது போலவும், அதற்கு பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் தன்னுடைய ஆதரவை மகிழ்ச்சியுடன் அளிப்பது போலவும், பாவகப் படுத்தப் பட்டிருக்கிறது.

இரண்டாவது போர் முனையைப் பற்றி அச்சுப் பிரசாரம்

டாக்டர் கோபல்சின் இடைவிடா முயற்சியும் அதன் பலனும்

பிரிட்டிஷ்-அமெரிக்க உதவியைப் பற்றி ஸ்டாலின் பாராட்டு

"முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்" என்ற பழமொழியை அடிக்கடி நாம் கேட்கிறோம். முயற்சியின் பெருமையைப் பற்றியும், அருமையைப் பற்றியும், பல புலவர்களும் அறிஞர்களும் பாராட்டிப் புகழ்ந்திருக்கிறார்கள். "தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும்," என்றார் திருவள்ளுவர். எந்தக் காரியத்தையும் முயற்சியினால் முடிக்கலாம் எனபது பல நாட்டுப் பேரறிவாளர்களுடைய் துணிபு. இதைப் பின் பற்றித் தான் டாக்டர் கோபல்ஸ் தன்னுடைய பிரசார வாழ்க்கையை நடத்தி வருகிறார் போலும். எத்தனையோ தடவை அவருடைய பிரசாரம் உண்மை யற்றது, ஆதாரமில்லாதது, என்று வெளிப்படுத்தப்பட்டது. கொஞ்சமாவது சளைத்தாரா அவர்? இடையவே இடையாது. அதற்குப் பதிலாக, அவருடைய முயற்சி அதிகப் பட்டது.

இகழ்ச்சி யடைந்தாலும் முயற்சியை விடமாட்டேன் என்று அவர் விடாப் பிடியாக, தன்னுடைய பிரசாரத்தினால் உலகத்தை மயக்கவும், மாற்றவும் முற்பட்டிருக்கிறார். ஆனால் அவருடைய மெய் வருந்தினாலும், அவருடைய முயற்சிக்கு முடிவான பயன் கிடைப்பது என்னமோ நடக்காத காரியம். ஏனென்றால், உலகத்தை உண்மையினால் கட்டுப்படுத்தலாம்; பொய்யினால் கட்டுப்படுத்தவும் முடியாது; வெட்டிப் பிளக்கவும் முடியாது. நேச நாட்டினரிடையே உள்ள ஒற்றுமையைக் குலைத்து வேற்றுமையை உண்டாக்க டாக்டர் கோபல்ஸ் எவ்வளவோ கஷ்டப்பட்டார்; முக்கியமாக, ரஷ்யாவுக்கும் இதர நேச வல்லரசுகளுக்கும் அபிப்பிராய பேதம் உண்டாக்குவதற்காக, டாக்டர் கோபல்ஸ் எடுத்துக் கொண்ட முயற்சி அபாரமானது. பல மாதங்களாக, ரஷ்யா விரும்பிய இரண்டாவது போர் முனையைப் பற்றி கோபல்சின் தலைமை ஸ்தானமாகிய பர்லின் வானொலி நிலையம் எத்தனையோ பொய்யுரைகளைக் கூறி வந்தது. அதனுடைய சிஷ்ய ஸ்தாபனங்களான டோக்கியோ முதலிய நிலையங்களும் இந்தப் பொய் கூறும் முயற்சியைப் பின் பற்றி வந்தன. எல்லா முயற்சிகளும் விழலுக் கிறைத்த நீரைப் போல வீணாகி விட்டன. ஆனால்

அச்சு நிலையங்கள் தம்முடைய தொழிலைக் கைவிடவில்லை. "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்று சொல்லுவார்கள். அதைப் போல, விடாப் பிடியாக அவைகள் மேலும் மேலும் பொய்ப் பிரசாரம் செய்து கொண்டே வருகின்றன.

கானல் நீரா ? முயற் கொம்பா ?

உதாரணமாக, சென்ற புதன்கிழமை **டோக்கியோ** நிலையம் இரண்டாவது போர் முனையைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது; மே மாதம் 3-ந் தேதி இந்துஸ்தானி மொழியில் செய்யப்பட்ட ஒலி பரப்பில், டாக்டர் கோப்பல்ஸ் முயற்சி தளராமல் சொல்லிக் கொண்டு வந்த பிரசாரத்தை டோக்கியோ ஒப்பித்திருக்கிறது:

"மிகப் பிரமாதமாக ஆங்கிலேயரால் விளம்பரப் படுத்தப் பட்ட இரண்டாவது போர் முனை இன்னும் கானல் நீராகத் தான் இருக்கிறது. பிரிட்டனும், அமெரிக்காவும் ரஷ்யாவை முன்னுக்குத் தள்ளி, தோற்கடிக்க முடியாத ஜெர்மனியுடன் தன்னந் தனியாகப் போராடும்படியாக விட்டு விட்டன,"

—என்று **டோக்கியோ** நிலையம் நீலிக் கண்ணீர் வடிக்கிறது. இதில் ரஷ்யாவுக்காகப் பரிந்து பேசியதைப் பின்னால் எடுத்துக் கொள்வோம்.

இரண்டாவது போர் முனை கானல் நீர் என்றல்லவா டோக்கியோ கூறுகிறது? அது கானல் நீரோ அல்லது முயற் கொம்போ என்பது கூடிய சீக்கிரத்தில் வெளியாகப் போகிறது. அது வரைக்கும் டோக்கியோவும், பர்லினும் தங்களைச் சமாதானப் படுத்திக் கொண்டு, "எங்களுக் கொன்றும் கெடுதி நேரப் போவதில்லையே" என்று தாராளமாகச் சொல்லிக் கொண்டிருக்கட்டுமே? இதனால் யாருக் கென்ன நஷ்டம்? அபாயம் வந்த காலத்தில் நெருப்புக் கோழி மணலுக்குள் தலையை நுழைத்துக் கொண்டு, அபாயத்தைக் காணாதது போல பாசாங்கு செய்யுமாம்! அதைப் போல, அச்சு நிலையங்கள் பாசாங்கு செய்கின்றன. இந்தப் பாசாங்கும் பசபசப்பும் எத்தனை நாளைக்கு? கூடிய சீக்கிரத்தில் இதற்குப் பதிலாக பரபரப்பும், படபடப்பும் அச்சு நாடுகளிடையே அதிகரிக்கப் போகின்றன.

"இரண்டாவது போர் முனைக்காக அல்லது மேற்கிலிருந்து வரும் படை யெடுப்புக்காக நாங்கள் பயப்படப் போவதில்லை" என்று பெர்லின் பிரசாரம் செய்து வருகிறது. அது தான், கானல் நீராயிற்றே, நடக்க முடியாத சம்பவமாயிற்றே; அதற்காக என் பயப்பட வேண்டும்? "பயப்படப் போவதில்லை" என்ற பிரசாரம் ஜெர்மானிய மக்களின் மனத்தைத் தைரியப்படுத்துவதற்காக. மூன்று வாரங்களுக்கு முன், அதாவது ஏப்ரல் 19-ந் தேதி பெர்லினில் இருந்து ஒலி பரப்பப்பட்ட ஒரு பிரசங்கத்தில், ஒரு வேடிக்கையான வாக்கியம் காணப்படுகிறது, பெர்லின் பிரசங்கியார் கூறுகிறார்:

"எது எப்படி யிருந்தாலும், அட்லாண்டிக் அரண் விரைவாகக் கட்டப்படவில்லை......சென்ற மூன்று வருஷங்களாக, மேற்கிலிருந்து படை யெடுப்பு வரக்கூடும் என்று ஜெர்மானிய மக்கள் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்கள்"

இதற்கு என்ன பொருள் என்றால், "படை யெடுப்பை ஜெர்மானியர்கள் அதிகக் காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்," என்பது தான். ஆனால் படை யெடுப்பு சம்பந்தமாக சென்ற மூன்று வருஷங்களாக ஜெர்மானிய மக்களுக்கு ஏதாவது அறிவிக்கப்பட்டதா? ஒன்றுமேயில்லை. அதற்கு மாறாக, கோப்பல்சும் அவருடைய சிஷ்ய கோடிகளும் படை யெடுப்பைக் குறித்துக் கேலி செய்து பிரசாரம் செய்து வந்தார்கள்.

"பைத்தியக்காரனுடைய கனவு"!

முதலில் 1941-ம் வருஷத்தை எடுத்துக்கொள்வோம். அந்த வருஷத்தில் ஆகஸ்டு 18-ந் தேதி ரோம் நிலையம் என்ன கூறிற்று? "தலைவர் முசோலினி ரோம் நகரத்தில் கூறியபடி, இடாலியின் மேலும் ஜெர்மானியின் மேலும் படையெடுப்பதென்பது பைத்தியக்காரனுடைய கனவே ஒழிய வேறல்ல," என்று பெருமை கூறிற்று. உண்மையில் என்ன நடந்திருக்கிறது? ஏறக்குறைய பாதி இடலி நம்முடைய துருப்புகள் வசத்திலிருக்கிறது. இடலியின் "டூச்சே" பேச்சு மூச்சேயில்லாமல் வெளி நாட்டில் தடமாடிக் கொண்டிருக்கிறார். ஜெர்மனியோ, படை யெடுப்பு எப்போது வரப்போகிறதோ என்று மனத்தடுமாற்றத்தில் இருக்கிறது. ஆனால் இரண்டரை வருஷங்களுக்கு முன் டாக்டர் கோப்பல்ஸ் இப்படிப்பட்ட தடுமாற்றத்தை எதிர்பார்க்க வில்லை. 1941-ம் வருஷம் டிசம்பர் 28-ந் தேதி "இங்கிலாந்தினால் தாக்க முடியாத அவ்வளவு பலமான நிலைமையை நாம் அடைந்திருக்கிறோம்," என்று கோப்பல்ஸ் இறுமாப்புடன் கூறினார்.

1942-ம் வருஷத்தை எடுத்துக் கொள்வோம். அப்போதும் பெர்லின் இம்மாதிரியான பேச்சை விடவில்லை. 1942 செப்டம்பரில் "இங்கிலாந்து, ஐரோப்பாவைத் தீர்மானமாகக் கைவிட்டு விட்டது, இனி மேல் எந்தக் காலத்திலும், ஐரோப்பாவில் கால் வைக்க முடியாது," என்று பெர்லின் வீரம் பேசிற்று. இதற்கு இரண்டு மாதங்களுக்கு பிறகு, அதாவது நவம்பர் 11-ந் தேதி கோப்பல்ஸ் ஒரு முடிவான அபிப்பிராயத்தை வெகு அலட்சியமாகத் தெரிவித்தார். "ஆங்கிலேயர் ஐரோப்பாவின் மேல் எப்போதும் படை யெடுக்க முடியாதென்பதை ஒவ்வொரு ராணுவத் திறமையாளரும் மிக நன்றாக அறிவார்," என்று கூறினார்.

1943-ம் வருஷத்தைப் பார்த்தால், அப்போதும் இதே மாதிரியான பேச்சுத் தான். சென்ற வருஷம் இதே மாதத்தில், **பர்லின்** நிலையம் உள் நாட்டு மக்களுக்கு ஒரு பிரசங்கத்தை ஒலிபரப்பியது:

"ஆயுதந் தாங்கிய துருப்புகள் ஜெர்மனிக்கு ஒரு கேடயம் போலிருக்கிறார்கள்; ஜெர்மனியைப் பாதுகாக்க ஒரு பிரம்மாண்டமான சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. அது இரும்பினாலும், எஃகினாலும் செய்யப்பட்ட சுவர். அது அட்லாண்டிக் கரையோரமாக மேலிருந்து வரும் அபாயங்களைத் தடுப்பதற்காக எழுப்பப்பட்ட சுவர். இப்படிப்பட்ட மகத்தான பாதுகாப்புக்குள் ஜெர்மனி சாவதானமாக வேலை செயது கொண்டு வருகிறது,"

—என்று **பர்லின்** கூறியிருக்கிறது.

இப்படியாக, படையெடுப்பு இடையாது என்று தொடர்ச்சியாகப் பெருமை கூறிக் கொண்டு வந்த பர்லின் இப்போது வேறுவிதமாகப் பேசுகிறது:

"சென்ற மூன்று வருஷங்களாக மேற்கிலிருந்து படையெடுப்பு வரக் கூடும் என்று ஜெர்மானிய மக்கள் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறார்கள்,"

—என்று மூன்று வாரங்களுக்கு முன் **பர்லின்** கூறியிருக்கிறது. ஒரேயடியாக இவ்வளவு பெரிய பொய் கூறியதற்கு என்ன காரணம்? பொய் கூறுபவர்கள் அதற்கு முன் கூறிய பொய்களை நினைவில் வைப்பதில்லை; அல்லது மற்றவர்கள் நினைவில் வைத்திருக்கக் கூடும் என்று யோசிப்பதில்லை!

ஓநாயின் துக்கம்

மற்றவர்கள் சில விஷயங்களை நினைவில் வைத்திருக்கலாம் என்பதற்கு ஒரு உதாரணம் கூறலாம். படை யெடுப்பு அல்லது இரண்டாவது போர்முனை என்பதைப் பற்றி ரஷ்யாவின் மேல் டோக்கியோ அனுதாபங் காட்டியதென்று முன்னர் குறிப்பிட்டோம். பிரிட்டனும், அமெரிக்காவும், ரஷ்யாவை முன்னே தள்ளிவிட்டு வேடிக்கை பார்க்கின்றன என்று **டோக்கியோ** கூறியிருக்கிறது. இதுவும் கோப்பல்சின் பழைய இடைவிடா முயற்சிகளில் ஒன்று—அதாவது, மித்திர பேத சூழ்ச்சி செய்து நேசநாட்டினரின் ஒற்றுமையைக் குலைக்கும் முயற்சி. 17 நாட்களுக்கு முன், ஏப்ரல் 23-ந் தேதியில், இம்முயற்சியைப் பின்பற்றி, **பர்லின்** ஒரு வார்த்தை கூறியிருக்கிறது:

"இரண்டாவது போர்முனையை ஆரம்பிக்காமல், அமெரிக்காவும், பிரிட்டனும் ரஷ்யாவைப் புறக்கணித்து விட்டன."

—என்று ஆடு நனைகிறதென்று அழும் ஓநாயைப்போல துக்கங் கொண்டாடியிருக்கிறது. ஆனால், ரஷ்யாவின் மாப் பெருந்தலைவர் மார்ஷல் ஸ்டாலின் ஆறு மாதங்களுக்கு முன் கூறியதை உலகம் நினைவில் வைத்திருக்கலாம் என்பதை பர்லினும், டோக்கியோவும் மறந்து விட்டன. 1943-ம் வருஷம், நவம்பர் மாதத்தில் மார்ஷல் ஸ்டாலின் இரண்டாவது போர்முனையைப் பற்றி என்ன கூறினார்?

"இப்போது நேசதேசத்தினர் ஜெர்மனியைக் கடுமையாகத் தாக்கிக் கொண்டு வருகிறார்கள்; ஜெர்மன் தொழிற்சாலைப் பிரதேசங்கள் வெடி குண்டுகளால் தகர்க்கப்படுகின்றன. இதன் மூலம் நம்முடைய முயற்சிகளுக்கு உதவி ஏற்படுகிறது. இது இரண்டாவது போர்முனையைப் போன்றதாகும்."—



இரண்டாவது போர் முனைக்குப் புதிய விமானம் :—“ஸ்பிட் பைர் 12” என்று பெயரிடப் பட்ட புதிய போர் விமானத்தின் பட மொன்று மேலே காட்டப்பட்டிருக்கிறது. குறைந்த பறக்கும் தூரத்தில் சிறந்த வேலை செய்வதற்கு வேண்டிய சௌகரியங்களுடன், இந்தப் புதிய விமானம் அமைக்கப்பட்டிருக்கிறது.

—என்று மார்ஷல் ஸ்டாலின் நேசநாட்டினர் உதவியை வெளிப்படையாகப் பாராட்டிக் கூறியிருக்கிறார். இது மாத்திரமல்ல. பத்து நாட்களுக்கு முன், அதாவது மே மாதம் முதல் தேதி, தாம் விடுத்துள்ள அறிக்கையில் பிரிட்டனும் அமெரிக்காவும் ரஷ்யாவுக்குச் செய்துவரும் பேருதவியை அவர் மீண்டும் பாராட்டியிருக்கிறார். மே தினக் கொண்டாட்ட விழா சம்பந்தமாக விடுத்த அந்த அறிக்கையில் டோக்கியோவின் பொய்ப் பிரசாரத்துக்கு இரண்டு நாளைக்கு முன்னதாகவே பதில் கூறுவதைப் போன்ற அந்த அறிக்கையில்—மார்ஷல் ஸ்டாலின் அழுத்தந் திருத்தமாக அச்சு நிலையங்களின் மித்திர பேதப் பொய் முயற்சியைச் சிதறடித்திருக்கிறார். இவர் கூறியதாவது :—

“இட்டாலியப் போர்முனையில் நடத்திவரும் யுத்தத்தினால், ரஷ்யாவோடு போர்புரியக் கூடிய ஜெர்மன் துருப்புகளின் பெரும்பாகத்தை நேச தேசத்தினர் வேறு துறையில் திருப்பி விட்டிருக்கிறார்கள். இதன் மூலம் அமெரிக்காவும், பிரிட்டனும் செஞ்சேனையின் வெற்றிகளுக்கு மிகவும் உதவி செய்துள்ளன; மிக அருமையான மூலப் பொருள்களையும், யுத்தத் தளவாடங்களையும், நமக்கு அனுப்பி உதவி செய்கின்றன; ஜெர்மனியின் ராணுவ லட்சியர்களை முறை தவறாமல் வெடிகுண்டுகளால் தாக்கி ஜெர்மனியின் ராணுவ பலத்தை வெறுத்துக் கொண்டு வருகின்றன.”

—என்று மார்ஷல் ஸ்டாலின் கூறியிருக்கிறார்.

2-வது போர் முனையின் வழி கோலிகள்

இப்போது இந்த வேறுக்கும் வேலை மிகவும் மும்முரமாக நடைபெற்று வருகிறது. நேசதேச விமானங்கள் பர்லினையும், இதர ஜெர்மன் ராணுவ லட்சியங்களையும், யுத்தத் தளவாட தொழிற் சாலைகளையும், அடிக்கடி தாக்கி, தவிடு பொடியாக்கிக் கொண்டு வருகின்றன. இந்தத் தாக்குதல்க ளெல்லாம், இரண்டாவது போர்முனை என்னும் மாபெருந் தாக்குதலின் வழி கோலிகளாகும். மேற்கிலிருந்து தொடங்கப் போகும் இந்தத் தாக்குதலும், கிழக்கிலிருந்து ரஷ்யா தொடர்ந்து நடத்திவரும் வெற்றி பவனியின் முடிவான தாக்குதலும் ஒன்று சேர்ந்தால், ஜெர்மனியினுடைய கதி என்னாகும் ?

“தோற்கடிக்க முடியாத ஜெர்மனி” என்று டோக்கியோ நிலையம் சென்ற புதன்கிழமை தன்னுடைய சகாவைப் போற்றியிருக்கிறது. ஓட்டப் பந்தயத்தில் என்னைத் தோற்கடிப்பார் யாருமில்லை என்று—வட ஆப்பிரிக்காவிலிருந்து ஓடியது தோல்வியல்ல; ரஷ்யாவில் பல நூறு மைல் பந்தய ஓட்டத்தில் பரிசுபெற முயன்றதும் தோல்வியல்ல—என்று டோக்கியோ நினைக்கிறது போலும் ! அப்படியே இருக்கட்டும். ஜெர்மனியின் முடிவான தோல்வி தொடங்குங் காலம் சமீபத்திருக்கிறது. காயமடைந்திருக்கும் கொடூர மிருகம் என்று மார்ஷல் ஸ்டாலின் குறிப்பிட்ட ஜெர்மனியின் அழிவு கால ஆரம்பம், அருகாமையில் தான் இருக்கிறது. அச்சு நிலையங்களின் பொய்ப் பிரசார முயற்சி இதை ஒரு சிறிதும் தடுக்கமுடியாது.

—“அச்சுப் பிரசாரம்” என்ற தொடரில் 1944-ம் ஞு மேமீ 10உல் சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து மிஸ்டர் டி. எ. வி. நாதன் செய்த ஒலிபரப்புப் பிரசங்கம்.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

கொண்டிருக்கின்றன ; மழை ஆரம்பமாகு முன்னதாகப் பின் வாங்கிப் போக வேண்டும் ; அல்லது அடியோடு அழிய வேண்டும். இந்த உண்மையை மறைக்கும் பொருட்டுத் தான், தாம் பல வெற்றிகள் அடைந்து விட்டதாகக் கயிறு திரிக்கிறார்கள். அவர்கள் வயப்பட்ட நாடுகளில் செலாவணியி லிருக்கும் நோட்டுக்கள் எவ்வளவு மோசடியானவையோ அவ்வளவு மோசடியானவை தான் இந்தச் செய்திகளும்.

நம் படையினர் ஏமாறுவதில்லை

இந்தச் செய்திகளைக் கேட்டு நம் படையினர் ஏமாறுவதில்லை. எதிரி கூறுவதைக் கேட்டு நாமுங் கூடச் சிரிக்கலாமென்று நான் நேர்முகமாகக் கண்டவற்றைக் கொண்டு உறுதி கூற முடியும். ஏனென்றால், தம் இராணுவ நோக்கத்தை ஜப்பானியர்கள் ஒரு போதும் நிறைவேற்றிக் கொண்டதில்லை. பர்மா, மலேயா, டச்சுக் கிழக் கிந்தியத் தீவுகள் ஆகியவற்றிற்கு விடுதலையளிப்பதாக அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எந்த அளவிற்கு உண்மையாயிற்றோ, அந்த அளவிற்குத் தான், தாம் வெற்றி பெற்று விட்டதாக டம்பம் பேசுவதும் உண்மையாகும்.

எல்லாம் போலி

போலி முன்னேற்றம், போலிச் செலாவணி, போலி வெற்றிகள் ஆகியவற்றைக் கொண்ட உலகில் அவர்கள் வாழுகிறார்கள். அவர்களுடைய ஏமாற்றத்திற்கு நாம் ஆளாகப்படாது. சமாதானத்தையும் விடுதலையையும் நாடி, போர் முனையில் போராடிக் கொண்டிருக்கும் நம்மவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்னும் மன உறுதியுடனே நாம் முன் செல்லுவோம். சமாதானத்தையும் விடுதலையையும் நாம் அடைய வேண்டுமானால், இந்த யுத்தத்தை வெற்றி கரமாக விரைவில் முடிக்க வேண்டும்.

நாம் கைவிடலாகாது

அளவு கடந்த நம்பிக்கையை நாம் கொள்ள வேண்டுமென்று நான் கூற வரவில்லை. கொஹிமா பகுதியில் கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் பல மாதங்கள் வரை நாம் கடும் போராட வேண்டி யிருக்கிறது. வெற்றி நாம் அடைவது உறுதி என்ற நம்பிக்கை, நாம் இப்போது கொண்டிருந்தது போல ஒரு போதும் கொண்டிருந்ததில்லை. எவ்வளவு காலத்தில் வெற்றி கிடைக்கும் என்பது தான் கேள்வி. உள் நாட்டிலும் போர் முனையிலும் உள்ள இந்தியர்கள் எல்லோரும் எந்த அளவிற்கு ஒற்றுமைப் பட்டு முயற்சிக்கிறார்களோ, அதைப் பொருத்துத் தான் வெற்றியடையும் பருவமும் அமையும். அஸ்ஸாமிலும் அரக்கானிலுமுள்ள நம் படையினர் தம் கடமைகளை மகா தீரத்தோடு செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நாம் கை விடலாகாது.

மடமையின் மகிமை

கோட்டை கட்டுதல்

ஒரு பெரிய கோட்டை கட்டிக் கொள்ளுகிறான் ஒருவன். அதிலே யாரும் புகாதபடி, பல ஏற்பாடுகள் செய்து வைக்கிறான். அப்புரம் அதனுள்ளே பிரமாதமான வெடி மருந்துச் சாலைகளை யெல்லாம் அமைக்கிறான். அதற்கப்பால், தன்னை யாராலும் அடிக்க முடியாது என்று திமிர் கொள்ளுகிறான். அதைத் தொடர்ந்து அடுத்த வீட்டுக்காரன் முதுகிலே போய், பளார் என்று ஒரு அறை வைக்கிறான். அவன் ஒரு அப்பாவி, ஆகவே, முதுகைத் தடவிக் கொண்டு சும்மா இருக்கிறான். அதைப் பார்த்ததும், கோட்டை கட்டியவனுக்கு இன்னும் அதிகக் குஷி ஏற்பட்டு விடுகிறது. தன் ஊனச்சுற்றி யுள்ளவர்களில் சில முட்டு ஆத்மாக்கள் மீது கல்லைத் தூக்கி எறிகிறான்.

அவ்வளவு தான்! அந்த முட்டு ஆத்மாக்கள் கிளம்புகிறார்கள் ஒன்று சேர்ந்து கொண்டு. சற்று நேரங்கழித்து, நாலாபுரங்களி லிருந்தும், கற்கள் விண், விண் என்று அதிவேகமாகப் பறந்து வருகின்றன. கட்டிடத்தை விட்டு வெளியே தலைகாட்டுவதும் ஆபத்தாக முடிகிறது. இது போதாதென்று, திப்பந்தங்கள் வேறே பறந்து வருகின்றன. அவற்றில் சில, வெடிமருந்துச் சாலைகள் மீது கணக்காக விழுகின்றன. கோட்டை கட்டிய சூரர் அதற்கப்பால் நிம்மதியாக இருக்க முடியுமா ? அவர் படுகிற அவஸ்தையையும், அவருக்கு நேரப்போகும் முடிவையும் சுற்றுமுற்றிலு முள்ளவர்கள் அறிந்து, மடமையின் மகிமை தான் என்னே என்று ஆச்சரியப் படுகிறார்கள்.

உண்மை நாடகம்

இது போன்ற உண்மை நாடகமே இப்பொழுது ஜெர்மனியில் நடக்கிறது. ஜெர்மனியை உள்ளடக்கி பிரமாண்டமான கோட்டை கட்டியவர் ஹிட்லர் தான். இந்தக் கோட்டைக்கு பல மதில்கள் எழுப்பினார். ஆனால், அவரது திமிரைக் காணச் சகியாது உலகமே சேர்ந்து கிளம்பி விட்டது. அவர் எழுப்பிய கோட்டை மதில்களில் ஒவ்வொன்றாக நொறுங்கி விழுந்துகொண்டிருக்கின்றன. நேச தேசப் படைகளும், ருஷ்யப் படைகளும் அதிபயங்கரமாக ஜெர்மனியைத் தாக்க முன் வந்து கொண்டிருக்கின்றன. அவர்களை இங்கே நிறுத்தினால் தேவலை, அங்கே நிறுத்தினால் தேவலை என்று எண்ணுகிறார் ஹிட்லர். ஆனால், அவர்கள் அங்கும் நிற்கமாட்டேன் என்கிறார்கள் ; இங்கும் நிறுத்த முடியவில்லை அவர்களை.

உண்மை தெரியும்

ஆனால், ஹிட்லர் எழுப்பிய கோட்டைகளும், அவற்றைக் காக்க அவர் சித்தப் படுத்திய வீரர்களின் சக்தியும் சாதாரணமானவையல்ல என்பதை நேச தேசத்தார் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியைப் பூரணமாக அடித்து, ஒடுக்கி, அதன் பல்லைப் பிடுங்குவதற்கு முன்னால், அதி கோரமான யுத்தங்கள் பலவற்றை நடத்தி வெற்றி கண்டாகவேண்டும் என்பதையும், அவ்வாறு யுத்தங்களை நடத்தும் பொழுது ஏராளமான நஷ்டங்கள் ஏற்படும் என்பதையும் நேச தேசத்தார் உணர்ந்திருக்கிறார்கள்.

சும்மா விடலாமா ?

ஆனால், உலகத்தின் நடுவிலே இப்படி ஒரு அயோக்ய சிகாமணியை சும்மா விட்டு வைத்திருந்தால், உலகமே அவரது கொடுங் கோன்மையின் பலனை அநுபவிக்க வேண்டி வருமே ! இப்பொழுது அவரையும், அவரது ஐரோப்பியக் கோட்டையையும் அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கும் பொழுதே, உல்கோர் எதேதோ சங்கடங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி யிருக்க, நேச தேசத்தார் இப்பொழுது தாங்கள் செய்துவரும் காரியங்களைச் செய்யாதிருந்தால், நாம் படக்கூடிய அவஸ்தைகளே தனி தான் !

ஸெபாஸ்டபோல் விஷயம்

நாம் சும்மா இருக்கும் பொழுது, நமது எதிரியும் தனது பலத்தைப் பெருக்கி, தனது நஷ்டத்தை ஈடு கட்டிக் கொள்ளக் கூடுமல்லவா ? ஆகவே, ருஷ்யர்கள் போனவாரம் திரும்பவும் தங்கள் வேலைகளைக் காட்டலானார்கள். கிரைமியாவிலே ஸெபாஸ்டபோல் துறைமுகத்தின் மீது குபீரெனப் பாய்ந்தார்கள். எதிர்பாராத வேகத்திலே அந்நகரைப் பிடித்து விட்டார்கள். லக்ஷக் கணக்கிலே அங்கிருந்த படைகள் எல்லாம் எப்படித் தான் தப்பிப் போயிற்றோ தெரியவில்லை. ஆனால், கருங்கடலில் மட்டும், பல ஜெர்மன் கப்பல்கள் ருஷ்ய விமானிகளின் குண்டுகளுக்கும், நீர்மூழ்கிகளின் வெடிகளுக்கும் பலியாயின என்பது நன்றாகத் தெரியும். அந்தக் கப்பல்களில் எத்தனை, ஜெர்மன் போர் வீரர்களைச் சுமந்து சென்றனவோ தெரியவில்லை ! ஸெபாஸ்டபோல் போரில் மட்டும் இருபதாயிரம் பேர்கள் கொல்லப்பட்டார்கள். 24 ஆயிரம் பேர்கள் கைதியாக அகப்பட்டார்கள். ருஷ்யர்கள் எவ்வளவு வேகத்தில், இந்நகருக்குள் புகுந்தார்கள் தெரியுமோ ? அங்கிருந்த ஜெர்மானியர் அங்கிருந்த மின்சார உற்பத்தி நிலையத்தைக் கூட அப்படியே உருவாக விட்டு விட்டுப் போகும்படி நேர்ந்து விட்டது. அதோடு, பல விமானங்கள் அப்படியே ரயிலிலோ, கப்பலிலோ வந்திறக்கப்பட்டபடியே ருஷ்யர்கள் வசம் அகப்பட்டு விட்டனவாம். நாஜிகள், கொஞ்சம் அவகாசமிருந்திருந்தால், இவ்வாறு மனசாறச் செய்திருப்பார்களா ?

ஸெபாஸ்டபோல் நகருக்குள்ளே ருஷ்யர்கள் புகுந்தபோது. அங்கு வீரத்துடன் இத்தனை காலமும் தங்கியிருந்த பெண்மணிகள் சிலர், ஆனந்தம் தாங்காது, ஆடிப்பாடிக் கொண்டே, கையிலகப்பட்ட மலர்களை யெல்லாம் பறித்து மாலையாகக் கட்டிக் கொண்டு, ஓடியே சென்று அவ் வீரர்கள் கழுத்துகளிலே அம்மாலைகளைப் போட்டு, அவர்களைக் கட்டி முத்தமிட்டார்களாம்.

மேலும் மேலும் அவதி

கீழ்த்திசையி லிருந்து ஜெர்மனிக்கு எதிர்பாராத ஆபத்துகள் வரக்கூடும். அதை எதிர்பார்த்து ஹிட்லர் சில இடங்களில் ருஷ்யர்களைக் கடுமையாகத் தாக்கும்படி பல வீரர்களை அனுப்பியிருக்கிறார். இனி ருஷ்யாவிலே ஜெர்மானியர் வெற்றி காண்பதும் சரி, 'அத்தை சித்தப்பா' ஆவதும் சரி. ஜெர்மானியரிடம் டாங்கிகள்கூட ரொம்பக் குறைந்துவிட்டதாக ப்ரஸ்தாபம். அப்படி யென்றால், புதிதாக டாங்கிகள் செய்து முடிக்கும் வரை, ஜெர்மனியின் பலம் குறைந்தது போல்தான். மேற்கொண்டு டாங்கிகளைச் செய்ய வொட்டாது ஜெர்மானியரை அல்லல்படுத்தும் அரிய கைங்கரியத்தை அமெரிக்க விமானிகளும், பிரிட்டிஷ் விமானிகளும் வெகு அழகாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ந்த குண்டு மழை

சென்ற வாரம் முழுவதும் ஆயிரக் கணக்கில் தான் அமெரிக்க விமானங்கள் பால்டிக் பிரதேசங்கள் மீது காட்சியளித்துக் கொண்டிருந்தன. பிரிட்டிஷ் விமானங்களும் சும்மா யிருக்கவில்லை. ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகள் மீது குண்டு மழை பொழிந்து கொண்டுதா னிருந்தன. நாஜிகளின் போக்கு வரத்துச் சாதனங்களுக்கும், ரயில் பாதைகளுக்கும் பெருத்த நாசம் ஏற்பட்டிருக்கின்றன. இனி ரஸ்தா வழியாகவே எல்லா உதவிகளும் மேற்கு ஐரோப்பாவிற்கு வர வேண்டும். ஆகையால், இவற்றை யெல்லாம் மேல் பார்த்துக் கொள்ளுவதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் ரோமல் துரை, ரயில் பாதை, ரஸ்தாக்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றை ரிப்பேர் செய்ய ஏராளமான ஆட்களை அனுப்பிக் கொண்டிருக்கிறாராம்.

எச்சரிக்கை

ஹாலந்திலே உள்ள மக்களுக்கு ஜெர்மன் அதிகாரிகள் எச்சரிக்கை செய்தாயிற்றாம். ஒரு நாளைக்கு வேண்டிய உணவுப் பொருள், ஒரு கம்பளம், கத்திகள், குறைந்த பக்ஷமாக வேண்டிய உடைகள் ஆகியவற்றை சித்தமாக மூட்டை கட்டி வைத்துக் கொண்டிருக்க வேண்டும் ; ஆபத்து வந்தால் சட்டெனக் கிளம்பிவிட வேண்டும் என்று அதிகாரிகள் சொல்லி விட்டார்களாம். ஹாலந்து, நார்வே ஆகிய பிரதேசங்களில் நேசப் படைகள் வந்திறங்கக் கூடும் என்று நாஜிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறுப் போலிருக்கிறது.

காட்டு பிளான்

நேச நாட்டினர் டெஹ்ரானில் போட்ட திட்டங்களிலே சில, எதிர்ப்பார்த்த காலத்திற்கு முன்பாகவே அமுல் படுத்தப்பட்டு விட்டன. கால நிலைமையில் எதிர்பாராத சௌகரியங்கள் கிடைத்தால் ருஷ்யர்களின் முன்னேற்றம் அதிவேகமாக

இருந்தது. பாக்கித் திட்டங்கள் எல்லாம் தக்க சமயத்தில் அமுலுக்கு வரும். ஹிட்லர் அவசரப்படுகிறுர் என்பதற்காக இரண்டாவது போர் முனையை சட்டென்று ஆரம்பிக்க முடியுமா என்ன ? பதறின காரியம் என்ன ஆகும்? சிதறுமல்லவா? அநுபவமில்லாமலா இந்தப் பழமொழியை அமைத்திருக்கிறுர்கள் ?

ஐரோப்பா மீது படையெடுத்தால், அது பெரிய அளவில் இருக்கும். ஆகவே, நடு நடுவே, சமயோசிதம்போல், போர் முறையையோ, திட்டத்தையோ மாற்றி யமைத்துக் கொள்வ தெனபது நடவாத காரியம். அதனுல், சமயம் பார்த்துத் தான் ஒரே போடு போடவேண்டும். அதைத் தான் நேச தேசத்தார் செய்யப் போகிறுர்கள்.

இரு நைப்பாசைகள்

ஹிட்லருக்குள்ள நைப்பாசைகள் எல்லாம் இரண்டு தான். ஒன்று நேச நாட்டினரிடை பிளவு ஏற்படாதா என்று ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருப்பது ; இரண்டாவது, இரண்டாவது போர் முனை ஏற்பட்டால், உயிரைக் கொடுத்தாவது அதைத் தடுத்து நிறுத்துவது. இந்த இரண்டும் நடக்குமா என்பது சந்தேகத்திலும் சந்தேகந் தான். ஹிட்லர் ஒரு அயோக்யசிகாமணி என்பது தெரிந்திருந்தும், அவர் எதிர்பார்க்கிறபடி அசட்டுத்தனமாக நேச தேசத்தார் நடந்துகொள்ளுவார்களா என்ன ?

ருஷ்யாவிற்கு உதவி ?

தங்கள் திட்டப்படியே நேச தேசத்தார் இரவு பகல் இருபத்து நான்கு மணி நேரமும் ருஷ்யாவிறகு உதவி அனுப்பிக் கொண்டே தானிருக்கிறுர்களாம். பிரிட்டனுடைய இராவெடி விமானங்கள் அடைந்து வரும் வெற்றிகளைக் கண்டு, ருஷ்யாவும் ஒருதனி விமானப் படையைத் தயாரித்துக் கொண்டிருக்கிறதாம். ருஷ்யாதான இன்று ரொம்ப சௌகரியமான நிலைமையி லிருக்கிறது. ஹிட்லருக்கு ருஷ்யாவை நினைத்த லே திகிலாகத் தானிருக்கும். ருஷ்ய விமானங்கள் ஜெர்மன் ரயில்வே ஜங்ஷன்களை யெல்லாம் தவிடு பொடியாக்கிக் கொண்டிருக்கின்றனவாம்.

இத்தாலியிலே !

இத்தாலியிலே, பல நாட்கள் இருந்த மந்தம் நின்று, பிரிட்டிஷ் எட்டாவது, ஐந்தாவது சைனியங்கள் அற்புதமாக ஒன்று கூடி பிரம்மாண்டமான தாக்குதல்கள் ஆரம்பமாகி விட்டன. அந்தத் தாக்குதல்கள் மளமளவென நிறைய வெற்றிகளைக் கொடுத்து விடவில்லை. ஏனென்றுல், நாஜிகள் இந்தத் தாக்குதலை எதிர்பார்த்து, கஸ்டவ் அரண், ஹிட்லர் அரண் என்ற பெயர்களில் பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறுர்கள். ஹிட்லர் அரணுக்கு ஆட்களை ஏராளமாக அனுப்பிக் கொண்டிருக்கிறுர்கள். எங்கும் எதிர்ப்புப் பலமாகவே இருக்கிறது.

ஆயினும், பிரம்மாண்டமான, அநுபவமிக்க, 8-வது, 5-வது சைனியங்கள், பல இடைஞ்சல்களையும் பொருட்படுத்தாது, கஸ்டவ் அரணில் பெரும் பகுதியை உடைத்தெறிந்து விட்டனவாம். ஜெர்மானியர் நெருப்புப் பந்தங்களை எறிகிறுர்களாம். ஆங்காங்கே, தாமாகச் சுடும் பீரங்கிகளை வைத்திருக்கிறுர்களாம். மரங்களிலே, சுரங்க வெடிகளைக் கட்டித் தொங்க விட்டிருக்கிறுர்களாம்.

இந்தியர் தமாஷ்

இத்தாலியிலே ஓரிடத்தில் நூறு வருஷ தான ஒரு இந்தியப் படை தனது நூறாவது வருஷ தினத்தைக் கொண்டாடிற்ரும். அதற்கு முதல் நாளிரவு, திடீரென்று எதிரிகளிருந்த வீடொன்றைத் தாக்கி தைரியமாக அதனைக் கைப்பற்றினுர்களாம் அப்படையைச் சேர்ந்த சிலர். மறுநாள் 100-வது ஆண்டு விழா.

பெட்ரோல் டின் டோலக்

திருவாங்கூரைச் சேர்ந்தவர்கள் பலரடங்கிய படையாம் இது. இவர்களில் ஒரு லான்ஸ் நாயக் ரொம்பத் தமாஷ் பேர் வழியாம். ஒரு காலி பெட்ரோல் டின்னை டோலக் வாத்யமாகப் பாவித்து, உத்சாகமாகத் தாளம் போட்டுக் கொண்டே, மலையாளப் பாட்டுப் பாட ஆரம்பித்து விட்டாராம் அவர். இந்தப் பாட்டிற்கு என்ன அர்த்தம் என்று பார்ப்பது போல், சில இத்தாலியக் குழந்தைகள், அவரைச் சூழ்ந்து நின்று பார்த்தனவாம். இத்தாலியப் போர் சீக்கிரமே வெற்றிகரமாக முடிந்தால், அதுவும் பல காரியங்களுக்கு சௌகரியமா யிருக்கும். அவ்வாறு இத்தாலியப் போர் சீக்கிரமே முடிவதென்பது தமது முடிவைத் துரிதப் படுத்துமென்பதை ஹிட்லர் உணர்ந்திருக்க வேண்டும். அதனுல் தான் இத்தாலியிலே ஏகப்பட்ட படைகளை வைத்திருக்கிறுரவர்.

பெட்ரோலுக்கு ஆபத்து

இத்தாலியிலிருந்தும், ருஷ்யாவிலிருந்தும் விமானிகள் பறந்து சென்று, ருமேனியாவில் உள்ள பிரபல எண்ணெய் வயல்களை பாழ்படுத்திக் கொண்டிருக்கிறுர்கள். இது வரை ஏற்பட்ட சேதங்களால், ஜெர்மனிக்கு இருந்த எண்ணெய் உற்பத்தியில் கால் பங்கு குறைந்து விட்டதாம். இந்தச் சமயத்திலே ஜெர்மானியருக்கு இது ஒரு பெரிய நஷ்டம் தான். கஷ்டம் கூட !

கிழக்கிலே குள்ளர்

ஜெர்மனியை ஒழிக்க ஒரு புரம் யுத்தம் நடக்கும் பொழுது, கிழக்கிலே ஜப்பானியரை அழிக்க ஒரு பெரிய சண்டை நடந்து கொண்டிருக்கிறது. ஜப்பானியரும் இந்தியாவின் வட கிழக்கு மூலையிலே தங்கி நிறக ஏதேதோ ஜகஜ்ஜால வேலைகள் எல்லாம் செய்து பார்க்கிறுர்கள். பெரிய பெரிய நரி வளைகளைத் தோண்டிக் கொண்டு, அவற்றிலே ஆகாரம், ஜலம், ஆயுதங்கள், வெடி மருந்துகள் எல்லாம் வைத்துக் கொண்டு, நமது படைகளுக்கு ரொம்பச் சிரமம் கொடுத்து வருகிறுர்களாம். டாங்கிகளை இந்த நரி வளைகளுக்கு வெகு சமீபத்தில் ஓட்டிச் சென்று, அவற்றிலிருந்து பீரங்கிப் பிரயோகம் செய்தாலன்றி, இந்த வளைகளில் உள்ள ஜப்பானியரை சும்மா இருக்கச் செய்ய முடியவில்லையாம். எவ்வளவு சிரமமிருந்தாலும், இந்தியாவில் காலடி வைத்த ஜப்பானியருக்கு, இங்கு இருப்பது எரிச்சல் உண்டாகும்படி செய்ய வேண்டுமென்பதே நம்மவர்களது நோக்கம். ஜப்பானியரும் விமானத் தாக்குதல்களை நடத்துகிறுர்கள். பர்மாவிற்குள் முன்னேறும் ஸ்டில்வெல்லின் படைகளுக்கு வேண்டிய ஆகாரங்களையும், ஆயுதங்களையும் எடுத்துச் செல்லும் சப்ளை விமானங்களைத் தாக்க முயலுகிறுர்கள். ஆனுல், இப் பிரதேசத்திலே, எல்லா வகைகளிலும் இப்பொழுது நம்மவர் கை தான் ஓங்கி யிருக்கிறது. கொஹிமா பிரதேசத்திலே, எதிரிகள் பல இடங்களிலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறுர்கள். பல இடங்களில் கடும் போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தியாவை அடைய ஆசை

சில மாதங்களுக்கு முன் ஜப்பானியர் அஸ்ஸாம் ரயில்வேக்கு பதினைந்து மைல் வரை நெருங்கிவிட்டார்களாம். ஆனுல், இப்பொழுதோ அந்த ரயில்வேக்கு உள்ள ஆபத்துகள் தீர்ந்து விட்டனவாம். சென்ற இரண்டரை மாதங்களில் மட்டும், பதினையாயிரம் ஜப்பானியர் எமனுலகு சென்றிருக்கிறுர்களாம். சென்ற இரண்டேகால் வருஷப் போரில் ஜப்பான் நாலாயிரம் விமானங்களைப் பறி கொடுத்திருக்கிறதாம். வரவர ஜப்பானியரின் சக்தி மெதுவாகக் குறைந்து கொண்டே வருகிறது. ஆனுலும், தகடுதத்தத்திலேயே அவர்கள், போரின் ஆயுளை நீடிக்கச் செய்து கொண்டிருக்கிறுர்கள். அவர்களுடைய கடற் படை எங்கிருக்கிறதென்றே தெரியவில்லை. ஏதாவது ஓரிடத்தில் அது தென்படுகிறது. மறு நாளே அங்கிருந்து அது எங்கோ கம்பி நீட்டி விடுகிறது. பரந்த சமுத்திரம் தன்னைச் சுற்றி யிருப்பதால் பகைவர்கள் லேசிலே தங்கள் நாட்டைத் தாக்க முடியாதென்று ஜப்பானியர் எண்ணி யிருந்தால், அதுவும் ஒரு மடத் தனமான எண்ணமாகும்.

கடைசியாக வந்த செய்தி

கடைசியாக வந்த செய்தி என்ன சொல்லுகிறது தெரியுமா ? கொஹிமா பிரதேசத்தை நம்மவர்கள் டாங்கிகள், விமானங்கள் ஆகியவற்றைக் கொண்டு வெகுக் கடுமையாகத் தாக்கி யிருக்கிறுர்கள். அதன் பலனுக, அந்தப் பிரதேசத்தில் உள்ள கடைசி ஜப்பானியனும் காலன் வசப் பட்டானும். கொஹிமா பிரதேசச் சண்டை, நாற்பது நாட்கள் அதி பயங்கரமாக நடந்து, நமக்கு ஏற்பட்ட வெற்றியுடன் முடிந்து விட்டது. ஒரே ரத்த களம்தானும். இனி இம்பாலை விடுவிக்க வேண்டியதே நம்மவர்கள் செய்ய வேண்டிய வேலை. அதுவும் சுகமே நடைபெறும்.

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

மே 9.—யுத்தம் முடிந்த உடனேயே பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் பொருளாதார அமைப்பு எப்படி இருக்குமென்பது பற்றி, குடியெற்ற நாடுகளின் முதன் மந்திரிகள் மகா நட்டில் ஆலோசித்தார்கள்.

மே 10.—பிரிட்டனும் சாம்ராஜ்ய நாடுகளும் ரஷ்யாவுக்கு வழங்கியுள்ள உதவிகளைக் குறித்து விளக்கி, காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் ஒரு பிரசங்கம் செய்தார்.

மே 11.—'பிரிட்டனும் சாம்ராஜ்யமும்' என்பது பற்றி கனடிய பிரதம மந்திரி மெக்கென்ஸி கிங் பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு முன்பு ஒரு பிரசங்கம் செய்தார்.

பிற நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கும் நேச நாடுகளின் அரசாங்கங்களோடு ஜெனரல் அய்சினேவர் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறார். அதன்படி, மேற்கு ஐரோப்பாவில் மீட்சி பெறும் நாடுகளுக்குக் கூடிய விரைவில் அதிகாரம் ஒப்புக் கொடுக்கப்படும்.

மே 12.—பிரிட்டனும் அமெரிக்காவும், பிற நேச நாடுகளும் (சோவியத் படைகள் தவிர) யுத்தம் ஆரம்பமானதி லிருந்து இது வரை 26,000 ஜெர்மன் இத்தாலி விமானங்களை நாசம் செய்திருப்பதாக விமான மந்திரி சர் ஆர்ச்சிபால்ட் சிங்க்ளேர் காமன்ஸ் சபையில் கூறினார்.

ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, பின்லாண்ட் ஆகிய நாடுகள் ஜெர்மனியோடு சேர்ந்து கொண்டு தோல்விக்கு ஆளாகப் போகின்றனவா அல்லவாவென்று அமெரிக்காவும், பிரிட்டனும் ரஷ்யாவும் இறுதிக் கடிதம் விடுத்திருக்கின்றன.

மே 13.—மிஸ்டர் சர்ச்சில், பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ், மெக்கென்ஸி கிங், சர் கார்ட்ப்ரே ஹக்கின்ஸ் (ரொடேசியா பிரதம மந்திரி) ஆகியோர் பிரிட்டிஷ் தாக்கும் படையை நேற்று பார்வையிட்டார்கள்.

மே 14.—மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அவர்கள் இங்கிலாந்தின் கப்பற் படையைப் பார்வையிட்டார்கள்.

மே 15.—மார்ஷல் ரோமெலுக்கும் ஜெனரல் பான்ரன்ஸ்டெட்டுக்கும் (மேற்கு ஐரோப்பிய ஜெர்மன் படைத் தலைவர்) கருத்து வேற்றுமை உண்டாகி யிருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

மே 10.—கர்னல் ப்ராங்க் நாக்ஸுக்குப் பதிலாக மிஸ்டர் ஜேம்ஸ் பாரெஸ்டெலை கப்பற் படை மந்திரியாக தலைவர் ரூஸ்வெல்ட் நியமித்திருக்கிறார்.

மே 11.—வட அட்லாண்டிக் கடலில், எச்.எம்.எஸ். ஸ்பே என்னும் பிரிட்டிஷ் கப்பல் 2 ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களை நாசஞ் செய்தது.

மே 12.—இத்தாலியிலுள்ள 5-ம் படைத் தலைவரான ஜெனரல் மார்க் கிளார்க் சமீபத்தில் அமெரிக்காவுக்கு இரகசியமாக வந்து ரூஸ்வெல்டுடனும் உத்தியோகத் தலைவர் ஜெனரல் ஜார்ஜ் மார்ஷலுடனும் மற்ற உயரிய இராணுவ உத்தியோகஸ்தர்களுடனும் கலந்து பேசினார்.

முக்கியமான யுத்த வேலைகளில் ஈடுபடும் பொருட்டு அமெரிக்காவில் உள்ள 20 லட்சம் பெண்கள் விசேஷப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

கடன் குத்தகைச் சட்டத்தின் கால அளவை அதிகப்படுத்த அமெரிக்க பிரதிநிதிகள் சபை அனுமதித்தது.

இந்தியா, பர்மா, இலங்கை.

மே 9.—கொஹிமாவை யடுத்து எதிரிகளை நேச நாட்டுப் படைகள் விரட்டிக் கொண்டிருக்கின்றன.

இம்பாலை யடுத்துள்ள பல கட்டங்களிலும் நேச நாட்டுப் படைகளுக்கு வெற்றிகள் கிடைத்தன.

மே 11.—இம்பாலுக்கு வடக்கே நேச நாட்டுப் படைகள் சற்று முன்னேறின.

மே 13.—டியாங்ஸப் என்னு மிடத்திலுள்ள எதிரி வெளி அரணகளைத் துளைத்துக் கொண்டு நேச நாட்டுப் படைகள் புகுந்து விட்டன.

மே 15.—மோகாங் ஆற்றிற்குக் கிழக்கேயுள்ள டாரோங்கியங் என்னும் ஊரை சீனப் படைகள் கைப்பற்றின.

ரஷ்யாவும், பின்லாந்தும்.

மே 9.—செபெஸ்டபோல் நகர வாயிலில் கை கலந்த போராட்டம் நடைபெறுகிறது.

மே 10.—செபெஸ்டபோலை ரஷ்யர்கள் கைப்பற்றி விட்டார்கள். கிரிமியா முழுதும் மீட்சி பெற்றுவிட்டது.

மே 12.—செபெஸ்டபோலில் நடந்த போராட்டத்தில் 20,000 ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டார்கள்; 24,000 பேர்கள் கைதி செய்யப்பட்டார்கள்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

மே 10.—பலிமா என்னுமிடத்தை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ரோமாபுரியின் இத்தாலியப் படைத் தலைவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

மே 12.—நேச நாட்டுப் படைகள் 1 மைல் தூரம் முன்னேறி எதிரி வசமிருந்த பல விடங்களைக் கைப்பற்றின.

மே 13.—ப்ரென்னர் கணவாய் ரயில்வே லைனை நேச நாட்டு வெடி குண்டு விமானங்கள் வெட்டி விட்டன.

கரியாற்றை யடுத்துள்ள சான் ஆஞ்சிலோ என்னுமிடத்தையும் சான் செபஸ்டினேவையும் அதை யடுத்துள்ள மலைப் பிரதேசத்தையும் நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

மே 14.—காசில் பார்டி என்னும் பட்டணத்தை நேச நாட்டுப் படைகள் கைப் பற்றிக் கொண்டன.

மே 15.—மாண்டியேயோ, சான் அம்ப்ரோக்யோ, வல்லா மெய்யோ, ஆசோனியா ஆகிய இடங்களை நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

விஷி, சுயேச்சை பிரான்சு எதிரி வயப்பட்ட நாடுகள்.

மே 15.—பிரஞ்சு ஆலோசனை சபை இன்று கூடி, 'பிரஞ்சு தேசிய மீட்சிக் கமிட்டி' என்றிருக்கும் பெயரை மாற்றி, 'பிரஞ்சுக் குடியரசின் தற்காலிக அரசாங்கம்' என்று பெயரிட வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானித்தது.

நடு நிலைமை நாடுகள்.

மே 9.—துருக்கியிலிருந்து முக்கியமான பொருட்களை ஏற்றுமதி செய்வது சம்மந்தமாக துருக்கி அரசாங்கத்திற்கு எழுதப்பட்ட கடிதத்திற்கு, அந்த அரசாங்கம் விடுத்திருக்கும் பதில், சாதகமானதாக இருக்கிறதென்று பார்லிமென்டரி காரிய தரிசி மிஸ்டர் டிங்கிள் புட் அறிவித்தார்.

தூரக் கிழக்கு நாடுகள்.

மே 9.—நியூ பிரிட்டனைச் சேர்ந்த ஹாஸ்கின்ஸ் முனை விமானக் கூடத்தை அமெரிக்கப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

சென்ற வாரக் கடைசியில், சான் பிரான்சிஸ்கோவில், அட்மிரல் நிமிட்ஸ், அட்மிரல் ஆஸலி, அட்மிரல் கிங் ஆகிய மூன்று படைத் தலைவர்களும் சந்தித்துப் பேசினார்கள்.

மே 14.—யுத்த நிலைமை பற்றி டோக்கியோ வானொலி மூலம் டோஜோ ஒரு விமரிசனம் செய்தார்.

வானொலி நாட் குறிப்புக்கள்

சென்னை, 24-5-44 புதன்கிழமை மாலை 7-மணிக்கு "அச்சுப்பிரசாரம்" என்பது பற்றி மிஸ்டர் பி. என். அப்புசாமி பேசுவார்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.